நீதி அமைச்சின் சுற்றறிக்கை - 02/2023(i)

எனது இல. MOJ/E9/பி.க.தி./2021

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

கொழும்பு 10

2023.09.12

சகல மேல் நீதிமன்ற நீதிபதிகள்,

சகல மாவட்ட நீதிபதிகள்,

சகல நீதவான்கள்,

சகல தொழில் நியாயசபைகளின் தவிசாளர்கள்,

பதிவாளர், உயர் நீதிமன்றம்,

பதிவாளர், மேன்முறையீட்டு நீதிமன்றம்.

**<u>நீதிமன்றம் மற்றும் தொழில் நியாய சபைகளினால் விநியோகிக்கப்படுகின்ற பிரதிகளுக்கான கட்டணங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்</u>**

மேலுள்ள சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2023.07.10 ஆம் திகதிய 02/2023 ஆம் இலக்க நீதி அமைச்சின் சுற்றறிக்கை தொடர்பில் தங்களின் கவனத்தைக் கோருகின்றேன். மேற்படி சுற்றறிக்கையின் 01, 02, 03 மற்றும் 04 ஆம் பிரிவுகளின் திருத்தம் தொடர்பாக பின்வரும் விளக்கங்கள் / திருத்தங்கள் மற்றும் ஏற்பாடுகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

01. **<u>சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்</u>**

1.1 பிரதிபண்ணி இயந்திரம் மூலம் (Photo copy machine) பெற்றுக் கொண்டு விநியோகிக்கப்படுகின்ற இரு பக்கமும் அச்சிடப்பட்டு சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதித் தாளுக்கு ரூபா 12.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். இத்தொகையில் ரூபா 6.00 ஆன தொகை மற்றும் எஞ்சிய ரூபா 6.00 இல் 70% ஐ அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய 30% இற்குரிய தொகை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

I. பிரதி எடுக்கும் அலுவலருக்கு 20%
II. சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு 10%

1.2 பிரதிபண்ணி இயந்திரம் மூலம் (Photo copy machine) பெற்றுக் கொண்டு விநியோகிக்கப்படுகின்ற ஒரு பக்கம் மாத்திரம் அச்சிடப்பட்டு சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதித் தாளுக்கு ரூபா 8.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். இத்தொகையில் ரூபா 5.00 ஆன தொகை மற்றும் எஞ்சிய ரூபா 3.00 இல் 70% ஐ அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய 30% இற்குரிய தொகை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

I. பிரதி எடுக்கும் அலுவலருக்கு 20%
II. சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு 10%

1.3 சமர்ப்பிக்கப்படுகின்ற பிரதிகளை சான்றுப்படுத்தும் போது இரு பக்கமும் அச்சிடப்பட்டு சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதித் தாளுக்கு ரூபா 7.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். இத்தொகையில் ரூபா 1.00 ஆன தொகை மற்றும் எஞ்சிய ரூபா 6.00 இல் 50% ஐ அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய 50% இற்குரிய தொகை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | ஒப்பிட்டுப் பார்க்கும் அலுவலருக்கு | 25% |
| II. | சான்றுப்படுத்தும் அலுவலருக்கு | 25% |

1.4 சமர்ப்பிக்கப்படுகின்ற பிரதிகளை சான்றுப்படுத்தும் போது ஒரு பக்கம் மாத்திரம் அச்சிடப்பட்டு சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதித் தாளுக்கு ரூபா 4.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். இத்தொகையில் ரூபா 1.00 ஆன தொகை மற்றும் எஞ்சிய ரூபா 3.00 இல் 50% ஐ அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய 50% இற்குரிய தொகை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | ஒப்பிட்டுப் பார்க்கும் அலுவலருக்கு | 25% |
| II. | சான்றுப்படுத்தும் அலுவலருக்கு | 25% |

1.5 கணினியொன்றில் அல்லது வேறு களஞ்சியப்படுத்தும் (Storage Device) அம்சமொன்றினல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த தட்டெழுத்து செய்யப்பட்ட ஒரு ஆவணத்தின் இரு பக்கமும் அச்சிடப்பட்ட ஒரு தாளின் அச்சிடப்பட்ட பிரதிக்கு ரூபா 17.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். ஒரு பக்கம் மாத்திரம் அச்சிடப்பட்ட ஒரு தாளுக்கு ரூபா 12.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். இவ்வாறு அறவிடப்படுகின்ற கட்டணம் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | பிரதி எடுக்கும் அலுவலருக்கு | 7 % |
| II. | சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு | 3 % |
| III. | அரச கட்டணம் | 90 % |

## 02. <u>பிரதிகளை தட்டெழுத்து செய்தல் மற்றும் சான்றுப்படுத்தும் கட்டணங்கள்</u>

தட்டெழுத்து செய்யும் இயந்திரம் மூலம் அல்லது கணினி இயந்திரத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுக்கு பின்வருமாறு கட்டணம் அறவிடுதல் வேண்டும்.

2.1 தட்டெழுத்து செய்யும் 25 வரிகளுக்கு மேற்பட்ட ஒரு பக்கத்துக்கு ரூபா 30.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும் என்பதுடன், மேற்படி கட்டணத்தில் ரூபா 12 மற்றும் எஞ்சிய ரூபா 18.00 இல் 20% ஆன தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய தொகை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | தட்டெழுத்துச் செய்யும் அலுவலருக்கு | 50% |
| II. | சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு | 30% |

2.2 தட்டெழுத்து செய்யும் 15 முதல் 25 வரையான வரிகளுக்கு ரூபா 25.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். மேற்படி கட்டணத்தில் ரூபா 13 மற்றும் எஞ்சிய ரூபா 12.00 இல் 20% ஆன தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய தொகை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | தட்டெழுத்துச் செய்யும் அலுவலருக்கு | 50% |
| II. | சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு | 30% |

2.3 தட்டெழுத்து செய்யும் 15 வரிகளுக்கு குறைவான ஒரு பக்கத்துக்கு ரூபா 22.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். மேற்படி கட்டணத்தில் ரூபா 14 மற்றும் எஞ்சிய ரூபா 8.00 இல் 20% ஆன தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய தொகை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | தட்டெழுத்துச் செய்யும் அலுவலருக்கு | 50% |
| II. | சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு | 30% |

**03.** <u>காபன் பிரதிகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்</u>

காபன் பிரதிகளின் மூலம் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிக்கும் போது பின்வருமாறு கட்டணங்களை அறவிடுதல் வேண்டும்.

3.1. 25 வரிகளுக்கு மேற்பட்ட ஒரு பக்கத்துக்கு ரூபா 13.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். மேற்படி கட்டணத்தில் ரூபா 6 ஆன தொகை மற்றும் எஞ்சிய ரூபா 7.00 இல் 50% ஆன தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய 50% ஆன தொகையை தட்டெழுத்து செய்யும் அலுவலருக்கு செலுத்தல் வேண்டும்.

3.2. 15 முதல் 25 வரையான வரிகளுக்கு ரூபா 12.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். மேற்படி கட்டணத்தில் ரூபா 7 ஆன தொகை மற்றும் எஞ்சிய ரூபா 5.00 இல் 50% ஆன தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய 50% ஆன தொகையை தட்டெழுத்து செய்யும் அலுவலருக்கு செலுத்தல் வேண்டும்.

3.3. 15 வரிகளுக்கு குறைவான ஒரு பக்கத்துக்கு ரூபா 11.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். மேற்படி கட்டணத்தில் ரூபா 8 ஆன தொகை மற்றும் எஞ்சிய ரூபா 3.00 இல் 50% ஆன தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய 50% ஆன தொகையை தட்டெழுத்து செய்யும் அலுவலருக்கு செலுத்தல் வேண்டும்.

4.1. கணினி இயந்திரம் அல்லது தட்டெழுத்து இயந்திரத்தைப் பயன்படுத்தி தட்டெழுத்து செய்து சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிக்கும் போது மேலே 02 ஆம் இலக்க பந்தியிலுள்ளவாறு கட்டணம் அறவிடல் வேண்டும் என்பதுடன், இதன் போது குறித்த பிரதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக மேற்படி ஆவணம் தட்டெழுத்து செய்யப்பட்டுள்ளதென்று குறித்த உறுதிச்சீட்டை சிபாரிசு செய்யும் அலுவலர் தனிப்பட்ட வகையில் திருப்தியுறல் வேண்டும்.

4.2. சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளாகக் கோருவதற்கு முடியுமான ஆவணங்களின் மென் பிரதியை (Soft Copy) முறையாக பாதுகாத்து களஞ்சியப்படுத்திப் பேணிவருவது குறித்த ஆவணத்தை தட்டெழுத்து செய்யும் அலுவலரின் பொறுப்பாகும்.

4.3. களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மென் பிரதியிலிருந்து அச்சுப் பிரதிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதன் காரணமாக அல்லது வன் பிரதியிலிருந்து (Hard Copy) பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமை காரணமாக சான்றுப்படுத்தும் பணிக்கு மாத்திரம் அதனை மீண்டும் தட்டெழுத்துச் செய்ய வேண்டி ஏற்படுமாயின், அதற்காக நிறுவனத் தலைவரின் அல்லது அதற்கு நிறுவனத் தலைவரினால் முறையாக தத்துவமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.4. ஒரு தடவை தட்டெழுத்து செய்யப்படட் ஆவணங்களை சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெற்றுக் கொடுக்கும் பணிக்காகவென மீண்டும் மீண்டும் தட்டெழுத்து செய்வதை குறைத்துக் கொள்வதற்கு முறையானவாறு உள்ளக முறையியல் ஒன்றை தயார் செய்து கண்காணிப்புச் செய்வது நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும்.

நீதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 02/2023 இன் 01, 02, 03 மற்றும் 04 ஆம் பிரிவுகள் தவிர மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்பதுடன், மேற்படி சுற்றறிக்கைக்கு அமைய இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள அறவீடுகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2023.09.15 ஆம் திகதி முதல் அமுலுக்குவருதல் வேண்டும்.

செயலாளர்

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.

பிரதி :

1. செயலாளர், நீதிச் சேவைகள் ஆணைக்குழு
2. பிரதம நிதி அலுவலர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.